आवक
INWARD 1252
पावरग्रिड/POWERGRID 25.09.20.
पल्लडम टी.एल.सि. / PALLADAM TLS




**தகவல் பெறும் உரிமைச்சட்ட மனு**

**அனுப்புநர்:-**

M.S. ஞான ஜனார்த்தன், B.E., B.L.,
அட்வகேட்,
T20, No:10 ஷாப்பிங்மால்-3 வது தளம்,
கோயம்புத்தூர் மெயின்ரோடு,
பொள்ளாச்சி-642 002.
அலைபேசி எண்:94434 06717.

**பெறுநர்:-**

பொதுத் தகவல் அலுவலர்,
பவர் கிரிட் கார்பரேசன் இந்தியா லிட்.,
பல்லடம், டி.எல்.சி. அலுவலகம்,
28பி-2 முதல் தளம்,
பொள்ளாச்சி ரோடு,
பி.வடுகபாளையம்,
பல்லடம்,
திருப்பூர் மாவட்டம்.

ஐயா/அம்மா வணக்கம்,

பொருள் :- தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 மத்திய சட்டம் 22/2005-ன் அடிப்படையில் கீழ்க்கோரிய தகவல்களை இம்மனு கிடைத்த 48 மணி நேரத்தில் வழங்கக்கோரி-மனு.

குறிப்பு :-

1. நான் கீழே கேட்டுள்ள தகவல்கள் என்னுடைய வாழ்வுரிமை, உயிர் பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் சார்ந்ததாக உள்ளதால் மேற்கண்ட சட்டப்பிரிவு 2(J) மற்றும் 7(1)ன்படி இம்மனு தங்களுக்கு கிடைக்கப்பெற்றவுடன் கீழே கோரிய தகவல்களை நேரில் காண வழிவகை செய்யவும் மற்றும் 48 மணி நேரத்திற்குள் மேற்கண்ட எனது அனுப்புநர் முகவரிக்கு பதிவுத்தபாலில் பதில் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

2. தகவல்களைக் பெறுவதற்கான கட்டணம் ரூ.10/-க்கு G.O.M.S.No:72 நாள் 20/03/2007 அரசு ஆணையின்படி நீதிமன்ற முத்திரை வில்லையை விண்ணப்ப மனுவில் ஒட்டியுள்ளேன். கீழே நான் கோரிய தகவல்களுக்கு இதற்கு மேல் ஆகும் கட்டணத்தையும் செலுத்த தயாராக உள்ளேன் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோரும் தகவல்கள்:-**

1. தங்களது துறையின் மூலம் பொள்ளாச்சி வட்டம் புரவிபாளையம் வருவாய் கிராம புல எண்களில் நிறுவப்படும் மின் கோபுரம் மற்றும் மின்கடத்தி ஆகியவற்றிலிருந்து குறைந்தது 300 மீட்டர் தூரத்திற்க்கு அப்பால் மட்டுமே கல்குவாரி இயங்கவேண்டும் என்பது சரியா? தவறா?
2. கல்குவாரியில் கற்களை பெயர்த்தெடுக்கப் பயன்படுத்தும் வெடி பொருட்களால் ஏற்படும் நில அதிர்வு மற்றும் நில விரிசல் போன்றவாற்றால் அருகில் உள்ள தங்களது துறை மின் கோபுரங்கள் மற்றும் இதர மின் உபகரணங்கள் பாதிப்படைய வாய்ப்புள்ளதா?
3. கல்குவாரியில் இருந்து வெடித்து வெளியேறிவரும் கற்களால் தங்களது மின் கோபுரங்கள் மற்றும் இதர மின் உபகரணங்கள் பாதிப்படைய வாய்ப்புள்ளதா?

நான் கோரிய மேற்கண்ட தகவல்கள் மற்றும் அதற்குண்டான ஆதார ஆவணங்கள் ஆகியவற்றை இம்மனு தங்களுக்கு கிடைத்த 48 மணி நேரத்தில் மேலே குறிப்பிட்ட சட்ட விதிகளுக்குட்பட்டு மேற்கண்ட எனது முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ பதில் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,

இடம் : பொள்ளாச்சி

தேதி : 24/09/2020

இப்படிக்கு,